1981 மார்ச் 9] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

2. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முனவடிவு எண் 24/1981).

3. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1981).

4. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரி களை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1981).

5. 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 27/1981).

6. 1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981).

(2) மேலவை உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 7—3—1981 அன்று காவல் துறை ஆணையரிடமிருந்து கீழ்க்கண்ட கடிதம் வரப் பெற்றது.

" திரு. ஆர். டி. சீத்தாபதி. எம். எல் சி அவர்கள் பெருநகர் கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட் முன்பு 7—3—1981 அன்று ஆஜர் படுத்தப்பட்டார். மேற்படி மாஜிஸ்டிரேட் உறுப்பினரை 21—3—1981 வரை மேலும் காவலில் வைக்க ஆணை பிறப்பித்தார். அவ்வுறுப்பினர் 7—3—1981 ஆம் நாளன்று சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டார்".

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(2) திருச்சி சிறையில் அடைக்கப்பட்டுள்ள தி. மு. க. கைதிகளுக்குப் போதிய குடி தண்ணீர்—உணவு போன்றவை கிடைக்காமையால் எழுந் துள்ள நிலைமை குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கர லிங்கம் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றுக்கு முன்னறிவிப்புக் கொடுத் திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்று சுருக்க மாக விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.